NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 3 April 2021

# வெனிஸ் கட்டடக் கலை காட்சியில் சிங்கப்பூரின் 16 படைப்புகள்

வெனிஸ் நகர கட்டடக் கலை கண்காட்சியில் சிங்கப்பூரின் 16 படைப்புகள் காட்சிப்படுத்தப்பட விருக்கின்றன.

சிங்கப்பூருக்கு ஒதுக்கப்பட்ட அரங்கத்தில் மெய்நிகர் காட்சி வழியாக சிங்கப்பூர் கட்டடக் கலையின் சிறப்புகள் காட்டப்படும்.

இவ்வாண்டின் கருப்பொருள் “உறவுகளைக் காட்டும் கட்டடக் கலை என்று பெயரிடப்பட்டுள்ளது.

என்யுஎஸ்-சிங்ஹுவா வடிவமைப்பு ஆய்வில் ஈடுபட்டுள்ள சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் டாக்டர் ஷாங் யேவும் சிங்கப்பூர் தொழில்நுட்ப வடிவமைப்புப் பல்கலைக் கழகத்தின் டாக்டர் ஜெஃப்ரி சானும் நகர்ப்புற காட்சிகளை படைக்கின்றனர்.

to-gather.sg எனும் இணையத் தளத்துக்குச் செல்வோர் கற்பனை நகரங்களின் காட்சிகளில் மூழ்கலாம்.

தெம்பனிஸ் ஹப்பும் காட்சிப்படுத்தப்படுகிறது.

1967ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து டிபி ஆர்க்கிடெக்ட்ஸ், சிங்கப்பூரின் முக்கிய கட்டடங்களை வடிவமைத்துள்ளது. அவற்றில் ஒன்று தெம்பனிஸ் ஹப். மக்கள் கழகம் இதன் மேம்பாட்டுக்கு தலைமை தாங்கியிருந்தது.

கட்டடக் கலையைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்தில் இந்தக் கட்டடம் கட்டப்பட்டது.

சிங்கப்பூரின் கட்டடக் கலையின் சிறப்பைக் காட்டும் வகையில் மொத்தம் 16 படைப்புகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.



சிங்கப்பூர் காட்சிப்படுத்தும் சில கட்டடங்கள். **படங்கள்: டிபி ஆர்க்கிடெக்ஸ், என்யுஎஸ்-சிங்ஹுவா.**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.